# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1873/30 - 2014 අගෝස්තු මස 01 වැනි සිකුරාදා - 2014.08.01

*1873/30 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**கிழக்கு மாகாண மாகாண சபை**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம்*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவத்தின் கீழ் கிழக்கு மாகாண முதலமைச்சரும் நிதி, திட்டமிடல், உள்ளூராட்சி, கிராமிய அபிவிருத்தி, புனர்வாழ்வு, மீள் குடியேற்றம், மனிதவலு, சட்டமும் ஒழுங்கும், பிராந்திய நிர்வாகம் மற்றும் சுற்றாடல் அமைச்சுக்கு பொறுப்பான அமைச்சருமாகிய அப்துல் மஜீத் மொகமட் நஜீப் ஆகிய நான், மேற்சொன்ன சட்டத்தின் பிரிவு 223 இனால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கமைவாக கீழே அட்டவணையில் விபரிக்கப்படுமாறு கட்டளையிடுகின்றேன்.*

அப்துல் மஜீத் மொகமட் நஜீப்,<br>
முதலமைச்சரும், நிதி, திட்டமிடல், உள்ளூராட்சி,<br>
கிராமிய அபிவிருத்தி, புனர்வாழ்வு, மீள் குடியேற்றம், மனிதவலு,<br>
சட்டமும் ஒழுங்கும், பிராந்திய நிர்வாகம் மற்றும் சுற்றாடல்<br>
தொடர்பான அமைச்சரும்,<br>
கிழக்கு மாகாணம்.

திருகோணமலை,<br>
*2014, யூலை 30.*

**அட்டவணை**

*அம்பாறை மாவட்ட எல்லைக்குள் அமைந்துள்ள தமன பிரதேச சபைக்கான 2014 ஆம் ஆண்டிற்குரிய வரவு செலவுத்திட்டம் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 168 மற்றும் 169 ஆம் பிரிவுகளின் தேவைப்பாடுகளுக்கு அமைவாக நிறைவேற்றத் தவறியுள்ளமை காரணமாக சொல்லப்பட்ட சட்டத்தின் பிரிவு 223 இனால் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம் சொல்லப்பட்ட சட்டத்தின் பிரிவு 3 இனால் குறித்த பிரதேச சபைக்கு பொறுப்பாக்கப்பட்ட செயற்பாடுகளை தடையின்றி முன்னெடுத்துச் செல்லும் நோக்கத்துக்காக நான், அம்பாறை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரை, 2014 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுகள் அப்பிரதேச சபையின் அனுமதி பெறப்படும். அத்தகைய காலப்பகுதி வரை கீழ்க்காட்டப்படும் விடயங்கள் மற்றும் அதற்கு இடைநேர் விளைவான செலவீனங்களை மேற்கொண்டு செலவிடும் அதிகாரத்தை 2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும்படியாக நியமித்து இத்தால் வழங்குகின்றேன்.*

விடயங்கள் :

1. சம்பளங்களும் கொடுப்பனவுகளும்
2. பயணப்படிகள்
3. காகிதாதிகள்
4. பயன்பாட்டுச் செயற்பாடுகள் மற்றும்
5. அபிவிருத்தி வேலைகளும், திட்டங்களும்.

*8- 606*




இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.